**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 2690/அ5/2026 நாள். .09.2026**

---

**பொருள் :** பள்ளிக் கல்வி பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை விரிவாக்கம் செய்தல் திட்டத் தொடக்க விழாவிற்கு முன்னதாக அனைத்து பள்ளி மையங்களிலும் புதிய பெயர்ப் பலகைகள் (Name Boards) நிறுவுதல் தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண்: 20, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.4-1) துறை, நாள்: 15.07.2026.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 035075/ஜே/இ1/2026, நாள்: 02.09.2026.

-----

பார்வை -1 இல் காணும் அரசாணையின்படி, தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு "பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் வகையில் 15454 அரசு மற்றும் அரசு உதவி பெறும் 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இத்திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்படும் மையங்களிலும் மற்றும் 6 - 8 ஆம் வகுப்பு வரை விரிவுப்படுத்தப்பட உள்ள அனைத்து பள்ளி மையங்களிலும், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் " என்ற பெயர் பலகையினை, கீழ்க்காணும் விவரக்குறிப்பு மற்றும் வடிவமைப்பின்படி அச்சிட்டு, திட்டம் விரிவுபடுத்தப்படுவதற்கு முன்னதாகவே பள்ளி மையங்களில் நிறுவிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| **Specification**: | **Dimension** : 4 X 2 feet<br>**Frame**: 1 inch mild steel pipe with primer and paint<br>**Print**: UV Star Flex without light |

மேலும் இத்துடன் இணைப்பில் வழங்கப்பட்டுள்ள மாதிரி பெயர்ப் பலகையில், பள்ளியில் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில், பெயர்ப் பலகை நிறுவப்படும் பள்ளியில் உரிய விவரங்கள் மற்றும், புதிய பெயர் பலகைகளை உரிய முறையில் நிறுவப்பட்டுள்ளதா என உறுதி செய்யுமாறும், பெயர் பலகையின் அளவு, வண்ணம் விவரக்குறிப்பு மற்றும் வடிவமைப்பின்படி ஒரே சீராக இருப்பதை உறுதி செய்யுமாறும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு ( இடைநிலைக் கல்வி) தெரிவிக்கலாகிறது.

மேலும் அனைத்து தலைமை ஆசிரியர்களும் புதிய பெயர் பலகைகள் நிறுவப்பட்ட விவரங்களை புகைப்படம் எடுத்து (Photo Copy) A5ceovlr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 11.09.2026 அன்று மாலை 3.00 மணிக்குள் அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(ஒம்) 09.9.2026

முதன்மைக் கல்வி அலுவலர், (பொ)
வேலூர்.

**பெறுநர் :**

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி)
வேலூர்.
2. அனைத்து அரசு/ அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.